Thalaivaasal
# தலைவாசல்
Thalaivaasal
எங்கள் பாரம்பரியம்
வீடு 01 வாசல் 129 | thalaivaasaltv@gmail.com | வெள்ளிக்கிழமை | பெப்ரவரி 19, 2021
தற்போது இணையத்திலும் தலைவாசல் www.thalaivaasal.news

## மிருசுவிலில் ஒரே குடும்பத்தினர் ஐவர் உட்பட 11 பேருக்கு கொரோனா தொற்று

யாழ். ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உள்ளிட்ட 11 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் ஆர். கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் (பெப்-19) யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட 462 பேரின் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். தென்மராட்சி மிருசுவில் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தினர் ஐவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்ட ஐவரும் ஏற்கனவே தொற்று உறுதி 03

## யாழில் கொள்ளை, திருட்டுகளில் ஈடுபட்ட மூவர் சிக்கினர்!

யாழ் நகரில் மூன்று இடங்களில் கொள்ளை மற்றும் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் உள்பட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

சந்தேக நபர்களிடமிருந்து 8 தங்கப் பவுண் நகைகள் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் கூறினர்.

கொழும்புத் துறையில் உள்ள வீடொன்றுக்குள் அண்மையில் புகுந்த மூவரடங்கிய கும்பல் அங்கு வசித்த வயோதிபர்களை மிரட்டி 8 தங்கப் பவுண் தங்க நகைகள் மற்றும் 2 லட்சம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டது 03

## p2p தொடர்பில் விசாரணைகள் தீவிரம்

### மணியிடம் வாக்குமூலம் பெற்ற பொலிஸார்

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டத்தில் கலந்து கொண்டமை தொடர்பில் யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணனிடம் பருத்தித்துறை பொலிஸார் வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர்.

யாழ்.மாநகர சபை முதல்வர் அலுவலகத்திற்கு இன்றைய தினம் வெள்ளிக்கிழமை சென்றிருந்த பொலிஸார் வாக்கு மூலத்தை பதிவு செய்தனர்.

அதன்போது சிங்கள மொழியில் வாக்குமூலத்தை பொலிஸார் பதிவு செய்த போது " எனக்கு வாசித்து புரிந்து கொள்ளமுடியாத மொழியில் பதிவு செய்யப்படும் 03

### கஜன்களிடமும் விசாரணை

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' மக்கள் எழுச்சி போராட்டத்தில் பங்கேற்றமை தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகிய இருவரிடமும் மாங்குளம் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த போராட்டத்தில் நீதிமன்ற உத்தரவை மீறி கலந்து கொண்டதாக குற்றம்சாட்டி பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோருரிடம் யாழில் வைத்து மாங்குளம் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த விடயம் தொடர்பில் இருவரிடம் மாங்குளம் பொலிசார் வாக்குமூலத்தினை பதிவு செய்து சென்றுள்ளனர். 03




## காரைநகரில் கடற்படைக்கு
# காணி சுவீகரிக்கும் முயற்சி முறியடிப்பு!

காரைநகர் நீலங்காடு பகுதியில், கடற்படையின் தேவைக்காக பொதுமக்களின் காணிகளை சுவீகரிப்பதற்காக எடுத்த முயற்சி, இன்று(19) முறியடிக்கப்பட்டுள்ளது.

காணி உரிமையாளர்கள், அரசியல்வாதிகள் இணைந்து கணியை அளக்க வந்த நில அளவை திணைக்கள அதிகாரிகளை வழிமறித்து போராட்டம் நடத்தியுள்ளதுடன், காணி சுவீகரிப்பு நடவடிக்கையை தடுத்து நிறுத்தியுள்ளனர். 03

## பட்டமளிப்பு விழாவை பிற்போடுங்கள்

### மாகாண சுகாதாரசேவைகள் பணிப்பாளர் ஆலோசனை

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவை இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடாத்துவதில் சிரமங்கள் ஏதாவது இருப்பின் நிகழ்வைப் பிற்போட்டு, கோவிட் 19 நிலமைகள் சீரடைந்த பின் பிறிதொரு நாளில் நடாத்தலாம் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் ஆலோசனை வழங்கியுள்ளார். 03

## அம்பாறையில் நில அதிர்வு

அம்பாறை பொத்துவில் கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் இன்று (19) மதியம் 11.44 மணியளவில் 4.0 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட அனர்த்த இடர் முகாமைத்துவ நிலையம் உறுதிப்படுத்தியுள்ளனர்.

பொத்துவில் சர்வோதயபுரம், சின்னஊறணி, ஜலால்தீன் சதுக்கம், களப்புகட்டு பிரதேசங்களில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாகவும் எது விதமான சேதங்களும் ஏற்படவில்லை எனவும் அனர்த்த இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவித்தது.

இதேவேளை, தமக்கு நில நடுக்கம் உணரப்பட்டதாக குறித்த பிரதேச மக்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போராட்டத்தில் கலந்து கொண்டோர் மீதான நடவடிக்கை ஜனநாயக இடைவெளியை அதிகமாக்கும்

பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்து பொலிஸார் விசாரணை 03

## வீடு புகுந்து ஓட்டோவுக்கு தீவைப்பு ஒருவர் கைது!

நவாலி அரசடியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த முச்சக்கர வண்டிக்கு தீமுட்டிவிட்டு தப்பிச் சென்ற நிலையில் அதனுடன் தொடர்புடைய இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். 03



# சரத் வீரசேகரவின் செயற்பாடுகள் எமக்கு தனித் தமிழீழத்தை பெற்றுத் தந்து விடும்!

**செல்வம் அடைக்கலநாதன்**



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டத்தில் மக்கள் எழுச்சியாக கலந்து கொண்டிருந்தனர். மக்கள் ஜனநாயக முறையில் கொரோனா தொடர்பான சமூக இடைவெளியை கடைப்பிடித்து போராட்டத்தை மேற்கொண்டிருக்கின்றார்கள்.

ஆகவே இந்த போராட்டம் ஜனநாயக ரீதியில் இடம் பெற்ற ஓர் போராட்டம் என தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று வெள்ளிக்கிழமை (19) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான ஆர்ப்பாட்டத்தில் மக்கள் எழுச்சியாக கலந்து கொண்டிருந்தனர். இந்த நிலையில் போராட்டத்தில் கலந்து கொண்ட இளைஞர்கள், பொது மக்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை பொலிசார் தேடித் தேடி விசாரிக்கின்றார்கள்.

நீதிமன்ற உத்தரவை மீறியதாகவும், நீதி மன்றத்தை தமிழர்கள் அவமதித்துள்ளார்கள் என காட்டுவதற்காக இந்த முயற்சி நடை பெறுகின்றது.

என்னைப் பொறுத்த மட்டில் மக்களுடைய எழுச்சி போராட்டம் இலங்கை அரசாங்கத்தினால் எமது மக்களுக்கு செய்யப்பட்ட அநீதிக்கு எதிராகவும் தமிழ் மக்கள் வாழ்கின்ற இடங்களை புறக்கணிக்கின்ற அல்லது சிங்களக் குடியேற்றங்களை உள் சேர்க்கின்ற செயற்பாட்டையும் வன விலங்கு பறவைகள் சரணாலயம், மகாவலி வலயம், புதைபொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் தமிழரின் மரபுகளை அழித்தல் போன்ற வற்றிற்கு எதிராகவே மக்கள் கிளர்ந்தெழுந்துள்ளார்கள்.

இதே நேரம் ஐ.நா மனித உரிமை ஆணையாளரினால் கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையானது மிகவும் வலுவான அறிக்கையாக இருக்கிறது.

இதனால் மக்கள் புரட்சிகளை தடை செய்வதும் அவர்களை அச்சமூட்டுவதும் இந்த ஆர்ப்பட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் உறுப்புரிமைகளை இல்லாது செய்கின்ற வன் முறையாகத்தான் பொலிஸாரின் நடவடிக்கை உள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு தொடர்பான அமைச்சர் சரத் வீரசேகர அவர்களின் செயற்பாடுகள் எமக்கு தனித் தமிழீழத்தை பெற்றுத் தந்து விடும். ஏன் எனில் ஐ.நா சபை தீர்மானம் நிறை வேற்றினால் இரண்டாக உடையும் என்று கூறியிருக்கின்றார்.

சரத் வீர சேகர அவர்களின் கருத்து வடக்கு கிழக்கு தமிழர்களை இல்லா தொழிக்க வேண்டும் என செயற்படுகின்றார். ஆகவே தமிழீழம் கிடைப்பதற்கு அதிக வாய்ப்பு இருப்பதாகவே நான் கருது கின்றேன்.

அதே நேரம் இந்த பொலிசாரின் நடவடிக்கையானது நீதிமன்ற ஆணையை நாம் புறக்கணிக்கின்றோம் என்ற அச்சத்தை கொண்டு வந்து எமது மக்கள் போராட்டத்தை மழுங்கடிக்கின்ற ஐ.நா சபையில் எமது கோரிக்கைகள் எல்லாம் இல்லாது செய்கின்ற முயற்சி எடுக்கப்படுகினறது.

அதன் காரணத்தினால் தான் எமது இளைஞர்களிலும், நாடாளுமன்ற உறுப்பினர்களிலும், பொதுமக்களிலும் கை வைக்கின்றார்கள்.

பொலிசாரின் அடக்கு முறைகளை கிழக்கு மாகாணம் பொத்துவிலில் உடைத் தெரிந்து அதே எழுச்சி பொலிகண்டிவரை இருந்துள்ளது அது எங்களுடைய வெற்றி. மக்கள் ஜனநாயக முறையில் கொரோனா தொடர்பான சமூக இடைவெளியை கடைப்பிடித்து போராட்டத்தை மேற்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இந்த போராட்டம் என்பது ஜனநாயக ரீதியில் செய்யப்பட்ட ஒரு விடயம்.

இது தொடர்ச்சியாக மேற்கொள்ளப் படும். எந்த ஒரு அச்சுறுத்தல்களுக்கும் அடக்கு முறைகளுக்கும் எமது மக்கள் அடிபணிய மாட்டார்கள்.

இலங்கை தேசம் இறுதி யுத்த வெற்றியை பயங்கரவாதத்தை அழித்து விட்டோம் என்று கொண்டாடினார்கள். அத்துடன் பயங்கரவாதத்தை அழிப்பது எப்படி என்று பாடம் எடுக்கப்போவதாகவும் கூறினார்கள்.

ஆனால் மக்கள் எங்களை அழிக்க முடியாது அழிக்க அழிக்க மீண்டெழுவோம் என்ற அந்த செய்தியை சரியான நேரத்தில் இந்த எழுச்சி ஊர்வலத்தின் மூலம் இலங்கைக்கும் உலகத்திற்கும் செய்து காட்டியுள்ளார்கள்.

ஆகவே எமது மக்களை யாரும் அடக்க முடியாது எங்களுடைய பிரச்சனைகளை இந்த ஜனநாயக போராட்டத்தின் ஊடாக தெரிவிப்போம்.

அந்த வகையில் உலக நாடுகள் நிச்சயமாக எங்களுடைய பக்கம் கரிசனை காட்ட வேண்டும். அதுவே எமது பிரதான நோக்கமாக இருக்கின்றது. ஆதை விட அயல் நாடு இந்தியா நிச்சயமாக தமிழர்களுடைய பக்கம் நிற்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்பது இந்த எழுச்சிப் பேரணியின் நோக்கமாக இருக்கிறது.

ஆகவே தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை அடக்கு முறைகளை எங்களது பூர்வீகத்தை இல்லாதொழிக்கின்ற அந்த நிலமைகளை தட்டிக் கேட்கின்ற எழுச்சியை மக்கள் ஏற்படுத்தி உள்ளனர்.

இந்த போராட்டம் தொடர்ச்சியாக நடைபெறும். எமது மக்கள் எந்த அச்சுறுத்தல்களுக்கும் அடி பணிய மாட்டார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் கூறுகின்றேன் என தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் மேலும் தெரிவித்தார்.

# சமூகப் பணி ஆற்றும் நபர் 2ஆம் மாடிக்கு அழைப்பு

யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை புலோலி மத்தி பகுதியைச் சேர்ந்த குத்துச்சண்டை வீரரும் சமூகச் செயற்பாட்டாளருமான சிங்பாகு சிவகுமார் (பொக்சிங் சிவகுமார்) என்பவர் கொழும்பு 2ஆம் மாடிக்கு விசாரணைக்கு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் அழைக்கப்பட்டுள்ளார்.

குறித்த விசாரணைப்பிரிவுப் பொலிஸார் அவரை இன்று சந்தித்து வாக்குமூலம் பெற்றிருக்கின்றனர்.

இதுகுறித்து சிவகுமார் கருத்துத் தெரிவிக்கையில்,

தான் புலம்பெயர் தேசங்களிலிருந்து கிடைக்கும் பணத்தினைக் கொண்டு இங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி புரிந்து வருவதாகவும் அவ்வாறான உதவிகளுக்கான நிதி எவ்வாறு கிடைக்கப்பெறுகின்றது, யார் அனுப்புவது போன்ற கேள்விகள் தன்னிடம் கேட்கப்பட்ட தான் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், எதிர்வரும் 23ஆம் திகதி கொழும்பு 01 இல் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் முதலாவது பொறுப்பதிகாரியைச் சந்திக்குமாறு தனக்கு கடிதம் கையளிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

சிவகுமார் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் மீன் சின்னத்தில் போட்டியிட்டிருந்தவர் என்று தெரியவருகிறது.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: விசாரிக்க அமைச்சர்கள் குழு

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான துறை மேற்பார்வை குழுவின் அறிக்கைகளை ஆராய்வதற்கும், பரிந்துரைகளை செய்வதற்கும் ஜனாதிபதியால் 6 அமைச்சர்கள் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் சமல் ராஜபக்ஷ குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜொன்ஸ்டன் பெர்ணான்டோ, உதய கம்மன்பில, ரமேஸ பதிரண, பிரசன்ன ரணதுங்க, ரோஹித்த அபேகுணவர்தன ஆகிய அமைச்சர்கள் ஏனைய உறுப்பினர்களாவர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான துறை மேற்பார்வை குழுவின் அறிக்கைகள் ஜனாதிபதி அலுவலகத்தினால் குழுவிற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

குழுவின் செயற்பாடுகளுக்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் உள்ளிட்ட ஏனைய செயற்பாடுகளுக்காக குழுவின் செயலாளராக ஜனாதிபதி அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் ஹரிகுப்தா ரோஹணதீர நியமிக்கப்பட்டுள்ளார்.

குழுவின் அறிக்கையை 2021 மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# வீதியோரம் நின்ற பாரவூர்தியுடன் மோதிய மற்றொரு பாரவூர்தி

கிளிநொச்சி நகரில் இன்று காலை இடம்பெற்ற வாகன விபத்தில் சாரதி காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து சம்பவம் இன்று அதிகாலை 3.30 மணியளவில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அண்மையில் ஏ9 வீதியில் இடம் பெற்றுள்ளது.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பார ஊர்தியின் பின்பகுதியில் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நெல் ஏற்றி சென்ற பார ஊர்தியின் சாரதி துயில்வதற்காக வீதியின் ஓரத்தில் வாகனத்தை நிறுத்தி வைத்துள்ளார்.

யாழிலிருந்து தெற்கு நோக்கி பயணித்த மற்றுமொரு பார ஊர்தி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்துடன் மோதியுள்ளது.

குறித்த விபத்தில் மோதிய பார ஊர்தி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், சாரதி சாதாரண காயங்களுடன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## கஜன்களிடமும்...

'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை' மக்கள் எழுச்சி போராட்டத்தில் பங்கேற்றமை தொடர்பில் வடக்கு கிழக்கு மற்றும் மலையகம் என பரந்துபட்டு பாராளமன்ற உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களிடம் வாக்குமூலம் பெறும் நடவடிக்கை தொடரச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வீடு புகுந்து...

மீட்கப்பட்ட மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடுக்கு சலோ ரேப் ஒட்டப்பட்டு மாற்றப்பட்ட நிலையில் உரிய இலக்கத்தை அடையாளப்படுத்தி சந்தேக நபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நவாலி அரசடியில் உள்ள வீடொன்றுக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இரண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற 5 பேர் கொண்ட கும்பல்,வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த முச்சக்கர வண்டிக்கு தீவைத்துவிட்டுத் தப்பித்தது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களை வெளிநாட்டிலிருந்து நடத்துபவர் என பொலிஸாரின் அடையாளப்படுத்துபவரின் வீட்டுக்குள் புகுந்தே முச்சக்கர வண்டிக்கு தீவைக்கப்பட்டது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தையடுத்து குறித்த கும்பலை அந்தப் பகுதி இளைஞர்கள் துரத்திச் சென்றனர். அதன் போது, மோட்டார் சைக்கிளை வீதியில் கைவிட்டு கும்பல் தப்பிச் சென்றது.

அந்த மோட்டார் சைக்கிள் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன் அடிப்படையில் கொக்குவில் கே.கே.எஸ். வீதியைச் சேர்ந்த 21 வயது இளைஞன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டுள்ள வரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருவதுடன், ஏனைய நால்வரையும் கைது செய்யும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

## P2P தொடர்பில்...

வாக்குமூலத்தில் கையொப்பம் இட மாட்டேன் " என முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் கூறியமையை அடுத்து அவரது வாக்கு மூலத்தை தமிழ் மொழியில் பதிவு செய்தனர்.

இதேவேளை குறித்த பேரணியில் கலந்து கொண்ட குற்றசாட்டில், மோட்டார் சைக்கிள் இலக்கத்தின் அடிப்படையில் பருத்தித்துறையை சேர்ந்த இளைஞன் ஒருவரை பருத்தித்துறை பொலிஸார் நேற்றைய தினம் வியாழக்கிழமை கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞனை சுமார் 6 மணி நேரங்களுக்கு மேலாக தடுத்து வைத்து விசாரணை செய்த பின்னர் , அவரது வாக்கு மூலத்தை பதிவு செய்த பின்னர் விடுவித்திருந்தனர்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டத்திற்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் தடை விதித்திருந்த நிலையில் , குறித்த போராட்டம் மக்களின் பேரெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நீதிமன்ற தடையை மீறி போராட்டம் நடத்தப்பட்டமை தொடர்பில் பருத்தித்துறை , நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிசார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்கு. தாக்கல் செய்துள்ள நிலையில் வழக்கு விசாரணைகள் நிலுவையில் உள்ள நிலையில் பொலிசார் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து அவர்களது வாக்குமூலங்களை பெற்று வருகின்றனர்

## பட்டமளிப்பு...

யாழ். பல்கலைக் கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள நிலையில், பட்டமளிப்பு நிகழ்வை கடுமையான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி

நடாத்துமாறு கோரி, அந் நடைமுறைகளைப் பட்டியலிட்டு யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரனின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் வருமாறு:

நாட்டில் எழுந்துள்ள கோவிட் 19 பரவல் அபாயத்தை அடுத்து, பரவலைத் தடுக்கும் வகையில் பொது நிகழ்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அதன் அடிப்படையில், இந் நிகழ்வு பற்றி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துடனும், தொற்று நோயியல் பிரிவின் தொற்று நோயியல் நிபுணருடனும் நாம் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின், பின்வரும் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஒரே அமர்வில் பங்குபற்றுபவர்களின் ஆகக் கூடிய எண்ணிக்கை 150 ஆக மட்டுப்படுத்தப்பட வேண்டும். அதற்கேற்ற வகையில் அமர்வுகள் மீள் பட்டியலிடப்பட வேண்டும். மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள் உட்பட வேறு எவரும் பல்கலைக்கழக வளாகத்தினுள் அனுமதிக்கப்படக் கூடாது.

முன்னைய அமர்வில் பங்கு பற்றியவர்கள் வெளியேறிச் சென்ற பின்னர் மட்டுமே அடுத்த அமர்வுக்கு உரியவர்கள் மண்டபத்தினுள் அனுமதிக்கப்பட வேண்டும்.

மாணவர்கள் தங்களுடன் தனிப்பட்ட படப் பிடிப்பாளர்களை அழைத்து வருவதற்கு அனுமதிக்கப்படக் கூடாது.

ஒவ்வொரு அமர்வின் போதும், மண்டபத்தினுள் நுழையும் சகலரது பெயர், பாலினம், வயது, தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி, தொடர்பு இலக்கம் உட்பட்ட விபரங்கள் மண்டப நுழைவாயிலில் வைத்துப் பதிவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு அமர்வின் முடிவிலும் பதிவு செய்யப்பட்ட அந்தந்த அமர்வுக்குரிய விபரங்களை நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளித்தல் வேண்டும்.

ஒவ்வொரு அமர்வின் போதும், மண்டபத்தினுள் நுழையும் சகலருக்கும் உடல் வெப்பநிலை பரிசோதிக்கப் பட்டு, காய்ச்சல் போன்ற நோய் நிலைகள் காணப்படின் அவர்கள் மண்டபத்தினுள் நுழைய முடியாதவாறு தடை செய்யப்பட வேண்டும்.

மண்டபத்தினுள் நுழையும் சகலரும் தமது கைகளைக் கழுவுவதற்கான வசதிகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் ஏற்படுத்துவதுடன், ஒவ்வொருவரும் கைகளைக் கழுவிய பின்னர் உள் நுழைவதை உறுதிப்படுத்துவது பல்கலைக்கழக நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

மண்டபத்தினுள் முகக்கவசம் அணிந்து உள் நுழைவதையும், தொடந்து அணிந்திருப்பதையும் உறுதிப்படுத்துவது நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

இரண்டு நபர்களுக்கிடையிலான சமூக இடைவெளியாக ஒரு மீற்றர் தூரம் பேணப்படுவதை உறுதி செய்வதும் நிர்வாகத்தின் பொறுப்பாகும்.

நிகழ்வு இடம்பெறும் சுற்றாடலில் உள்ளும், வெளியும் உணவுப் பொருள்கள், நீராகாரங்கள் எந்தவொரு வடிவத்திலும் கையாளப்படுவதற்கு அனுமதியளிக்கப்படக் கூடாது.

மேலதிகமாக நிகழ்வுக்கு முறையான அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியிடம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

அனுமதிக்கு மேலதிகமாக, நிகழ்வைத் திட்டமிடும் போதும், நிகழ்வின் போதும் நல்லூர் பிரதேச வைத்திய அதிகாரியின் பிரசன்னத்துடன் அவரது ஆலோசனைகளை ஏற்று, ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

இந்த சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதில் சிக்கல்கள் காணப்படுமாயின் கோவிட் 19 பெருந்தொற்று அபாயம் இயல்பு நிலைக்கு வந்த பின்னர் புதிய நாள் ஒன்றுக்கு நிகழ்வைப் பிற்போடுவது உகந்ததாகுமென ஆலோசனை வழங்கப்படுகிறது என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட செயலாளர், சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் உள்பட 11 பேருக்கு அந்தக் கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன

## யாழில் கொள்ளை...

அதேவேளை அண்மையில் யாழ்ப்பாணம் மருதடி லேனில் உள்ள பூட்டியிருந்த வீட்டை உடைத்து இலத்திரனியல் உபகரணங்கள் திருட்டுப் போயிருந்தன.

அத்துடன் அண்மையில் இரவு வேளை அரியாலை துண்டிலில் உள்ள கடைகள் இரண்டு கடைகள் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருள்கள் திருட்டுப் போயிருந்தன.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

அவை தொடர்பில் பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தடயங்களின் அடிப்படையில் பாசையூர், குருநகர் மற்றும் பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் வசிக்கும் 23 தொடக்கம் 40 வரையிலான மூவர் கைது செய்யப்பட்டனர்.

அதேவேளை சந்தேக நபர்கள் மூவரிடமும் நகை மற்றும் பொருள்களை வாங்கி குற்றச்சாட்டில் மேலும் இருவரும் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 8 தங்கப் பவுண் நகைகள் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் ஐவரையும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து போலீசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

## காரைநகரில்...

குறித்த பகுதியில், ஜே.45 பிரிவுக்கு உட்பட்ட 67 பேருக்கு சொந்தமான 50 ஏக்கர் காணிகளை, கடற்படை தமது தேவைகளுக்காக சுவீகரிக்க நடவடிக்கை எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைவாக குறித்த காணிகளை அளவிடும் பணிகளுக்காக, நில அளவை திணைக்களத்தினர் வருகைதந்த போது அங்கு ஒன்று கூடியவர்கள் எதிர்ப்பை தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து நில அளவை திணைக்களத்தினர் அங்கிருந்து திரும்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போராட்டத்தில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## போராட்டத்தில்...

செய்யும் நடவடிக்கைகளை கண்டிப்பதாக பொத்துவில் தொடங்கி பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் தெரிவித்துள்ளது

இது தொடர்பாக பேரைழுச்சி இயக்கத்தினர் மேலும் தெரிவித்ததாவத்

பொத்திவில் தொடங்கி பொலிகண்டிவரை மக்கள் எழுச்சி போராட்டம் ஒன்று அண்மையில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்களை பொலிஸார் பல்வேறு காரணங்களை கூறி விசரைணைக்கு அழைக்கிறார்கள். அதனால் பல அசௌகரியங்களுக்கு மக்கள் உள்ளாகிறார்கள் .

பொதுமக்கள்,மதகுருக்கள், கட்சி பிரமுகர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என அனைவருக்கும் பல்வேறு குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி விசாரணைக்கு அழைக்கிறார்கள். இச்செயற்பாடுகள் இந்த நாட்டில் ஜனநாயக இடைவெளியை மேலும் அதிகமாக்கும் .

இந்த பேரணி வன்முறைகள் எதுவும் இன்றி மிக ஒழுக்கமாக அகிம்சை ரீதியில் இடம்பெற்றது . எனவே நாட்டின் குடிமக்களாக நாமும் சுதந்திரமாக வாழ இந்த நாட்டில் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் வழிசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளனர்

## மிருசுவிலில்...

செய்யப்பட்டிருந்த, மன்னார் நானாட்டான் ஹற்றன் நசனல் வங்கி ஊழியர்களுடன் தொடர்புடைய ஒருவரின் குடும்பத்தினர் எனத் தெரிவித்தார்.

அச்சுவேலி மரக்கறி சந்தையில் ஏற்கனவே தொற்று உறுதியான நால்வரில் ஒருவரது மனைவிக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுதவிர, தடிமன், காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகளுடன் யாழ். போதனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த நபர் ஜா-எல பகுதிக்கு சென்று திரும்பிய நிலையில் கொரோனா அறிகுறிகள் தென்பட்டதை அடுத்தே யாழ். போதமனா வைத்தியசாலை வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சைக்காக சென்றபோது பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை பணியாளர்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் உள்ள ஒருவருக்கும் இன்றைய பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் இன்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் நெல்லியடி மரக்கறி சந்தை வியாபாரி ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு இன்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட 828 பேரின் பரிசோதனை முடிவுகளின் அப்படையில் வட மாகாணத்தைச் சேர்ந்த 10 பேருக்கும் தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக்கும் என 11 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி

ஊடகவியலாளர்களுக்கும் மிக விரைவாக கொவிட் வைரஸ் தடுப்பூசியை வழங்குமாறு வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளரினால் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்று விடுக்கப்பட்டுள்ளது.

ஊடகவியலாளர்களினால் மேற்கொள் ளப்படுகின்ற கடமைகளின் தன்மையைப் பொறுத்து அவர்கள் பல்வேறு ஊடக வியலாளர் சந்திப்புக்களில் கலந்துகொள்ள வேண்டியுள்ளதால் இக் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

மக்களுக்கு தகவல்களை வழங்குவதில் தமக்கு ஏற்படும் ஆபத்தையும் பொருட் படுத்தாது செயற்படுவதனால் வெகுஜன ஊடக அமைச்சுக்குட்பட்ட சகல நிறுவ னங்களினதும் ஊழியர்கள் மற்றும் ஊடக வியலாளர்களுக்கும் தடுப்பூசியை வழங்குமாறு அமைச்சின் செயலாளர் கேட்டுக்கொண்டார்.

வெகுஜன ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவின் ஆலோசனைக்கமைய, அமைச்சின் செயலாளர் இந்தக் கோரிக் கையை சுகாதார அமைச்சின் செயலாள ரிடம் முன்வைத்துள்ளார்.

அத்துடன் இதற்கு முன்னரும் கொவிட்-19 வைரஸ் பரவல் தடுப்புக்கான தேசிய பணிக் குழுவுக்கு இந்த தடுப்பூசியை வழங்குமாறு அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் பல ஊடக அமைப்புக்கள் மற்றும் ஊடக நிறுவனங்களில் நிலவும் சூழ்நிலைக்கமைய ஊடகவியலாளர்களுக்கு தடுப்பூசியை வழங்குமாறும் பல்வேறு கோரிக்கைகள் வந்துள்ளன.

மேலும் பொதுமக்களுக்கு தேவையான மருந்துகள், கடிதங்கள் மற்றும் பொதிகள் என்பவற்றை விரைவாக பெற்றுக்கொள்வ தற்காக உதவும் தபால் சேவை ஊழியர் களுக்கும் இந்த ஆபத்தான நிலைமை இருப்பதனால், இவர்களுக்கும் கொவிட் தடுப்பூசியை வழங்குமாறு வெகுஜன ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

# மன்னாரில் இதுவரை 233 பேருக்கு கொரோனா தொற்று

மன்னாரில் இதுவரை 233பேர், கொரோனா வைரஸ் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளதாக அம்மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில், இன்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக் கும்போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

இதன்போது வைத்தியர் ரி. வினோதன் மேலும் கூறியுள்ளதாவது, “மன்னார் மாவட்டத்தில் நேற்று மேலும் ஒரு கொரோனா தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் மன்னார் நகர் பகுதியில், சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றில் கடமையாற்றி வருகின்ற நிலையில், இவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனையின் போது கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவருடன் சேர்த்து பெப்ரவரி மாதம் மாத்திரம் 51 பேர் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டனர். மேலும், மாவட் டத்தில் தற்போது வரை 233பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த மாதத்துடன் ஒப்பிடும் போது இந்த மாதத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மன்னார் மாவட்டத்தில் குறைவடைந் துள்ளது.

எனினும் கொரோனா தொற்று அபாயம் தொடர்ச்சியாக காணப் படுவதினால் மக்கள் மிகுந்த அவதா னத்துடன் செயற்பட வேண்டும்.

மேலும் இந்த மாதம் மொத்தமாக 1,454 பி.சி.ஆர்.பரிசோதனைகளும் தற்போது வரை மாவட்டத்தில் 10 ஆயிரத்து 82 பி.சி.ஆர்.பரிசோத னைகளும் மேற்கொள்ளப்பட்டுள் ளன.

தடுப்பூசி செலுத்துவதன் 2 ஆவது கட்டமாக சமூகத்திற்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் மார்ச் முதலாம் வாரம் ஆரம்பிக்கப் படும்.

30 வயது தொடக்கம் 60 வயது வரை தொழில் செய்கின்ற அனை வருக்கும், 60 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் முதல் கட்டமாக தடுப்பூசி செலுத்தப்பட உள்ளது.

மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 1250 தடுப்பூசிகள் சுகாதார துறையினருக்கும், தேர்ந்தெடுக்கப்பட்ட பொலிஸ ாருக்கும் செலுத்தப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளை அனைவரும் விரை வாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

சமூகத்தில் 85 சதவீதமான மக்கள் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முன்வந்தால் எமது சமூகத்தில் இருந்து கொரோனா தொற்றுச் சங்கிலியை முழுமையாக உடைத்து கொரோனா தொற்றில் இருந்து இந்த மாவட்டத்தை முழுமையாக பாதுகாக்க முடியும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவருக்கு கொரோனா தடுப்பூசி



வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர்கள் மூவருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர்கள் மூன்று பேருக்கு இன்றைய தினம் (வெள்ளிக்கிழமை) மதியம் மன்னாரில் வைத்து கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் வைத்து கொரோனா தடுப்பூசி செலுத் தப்பட்டுள்ளது.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.வினோ நோகராதலிங்கம், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகிய மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இவ்வாறு கொரோனா தடுப்பூசி செலுத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாத எம்.பிகளுக்கு மீண்டும் வாய்ப்பு



இதுவரை ஒக்ஸ்பர்ட் எஸ்ட்ரா செனகா கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாத பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக எதிர்வரும் வாரத்தில் மேலும் 3 நாட்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய கொவிட் செயலணியால் இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாராளு மன்ற படைக்கள சேவிதர் நரேந்திர பெர் னான்டோ தெரிவித்தார்.

அதன்படி, பெப்ரவரி 23 தொடக்கம் 25 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கொழும்பு நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள இராணுவ வைத்தியசாலையில் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரை பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு குறித்த தடுப்பூசி வழங்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அநேகமான பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் வாரத்தில் கொழும்பிற்கு வருகை தந்து பாராளுமன்ற கூட்டத்தொடர்களில் கலந்துக் கொள்ளவுள்ள நிலையில் அவர் களுக்கு இத்தினங்களில் கொவிட் தடுப்பூசியை பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது.

# தமிழக அரசின் கலைமாமணி விருதுகள் அறிவிப்பு

தமிழக அரசின் கலைமாமணி விருதுகள் 42 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசு சார்பில் திரைத்துறை உட்பட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு கலைமாமணி விருது ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில், தற்போது சிவகார்த்தி கேயன், ராமராஜன், சரோஜா தேவி, சவுக் கார் ஜானகி உட்பட 42 பேருக்கு கலை மாமணி விருது வழங்கப்படுவதாக தமிழக அரசு அறிவித்துள்ளது. விருது அறிவிக்கப் பட்டோர் விபரங்கள் வருமாறு,



**கலைமாமணி விருது பெறும் நடிகர்கள்**

ராமராஜன், சிவகார்த்திகேயன், யோகி பாபு ஆகியோருக்கு வழங்கப்படவுள்ளது.

**கலைமாமணி விருது பெறும் நடிகைகள்**

பழம்பெரும் நடிகைகள் சரோஜாதேவி, சவுகார் ஜானகி ஆகியோருக்கும், நடிகைகள் சங்கீதா, ஐஸ்வர்யா ராஜேஷ், தேவ தர்ஷினி, மதுமிதா ஆகியோருக்கும் கலை மாமணி விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

**கலைமாமணி விருது பெறும் இசையமைப்பாளர்கள், பாடகர்கள்**

இசையமைப்பாளர்கள் டி இமான், தீனா ஆகியோருக்கும், பாடகர்கள் சுஜாதா, அனந்து ஆகியோருக்கும் இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

**கலைமாமணி விருது பெறும் தயாரிப்பாளர்கள்**

கலைப்புலி எஸ்.தாணு, ஐசரி கணேஷ் ஆகியோருக்கும் விருது வழங்கப்பட வுள்ளது.

**கலைமாமணி விருது பெறும் இயக்குநர்கள்**

கவுதம் மேனன், லியாகத் அலி கான், மனோஜ் குமார், ரவி மரியா ஆகிய நான்கு இயக்குநர்களுக்கு கலைமாமணி விருது வழங்கப்படவுள்ளது.

**கலைமாமணி விருது பெறும் சின்னத்திரை நட்சத்திரங்கள்**

நடிகர் நந்தகுமார், நடிகைகளான சாந்தி வில்லியம்ஸ் மற்றும் நித்யா ஆகியோருக்கு இந்த விருது வழங்கப்படவுள்ளது.

இதனைவிட, ஸ்டண்ட் மாஸ்டர்களான ஜாக்குவார் தங்கம், தினேஷ், நடன இயக்குநர்கள் சிவசங்கர், ஸ்ரீதர், எடிற்றர் அண்டனி, மெல்லிசை கோமகன், பாடலாசிரியர்களான காமகொடியன், காதல் மதி, வசனகர்த்தா வி.பிரபாகர் மற்றும் ஒளிப்பதிவாளர் ரகுனாத ரெட்டி ஆகியோருக்கும் கலைமாமணி விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.